பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

28 05 2025 **WEDNESDAY** 6 30 **PM**

தலைப்புச் செய்திகள்

1. நடப்புப் பருவத்தில் 14 வேளாண் விளைபொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2. மத்திய அமைச்சரவையின் இந்த முடிவு கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்த உதவிடும் என்று வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

3. பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்க இயலாது என்பதை அண்ணா பல்கலைக் கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கின் தீர்ப்பு உறுதி செய்துள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

4. வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுவடைய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், 4 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

<<<<<<<>>>>>>>

வேளாண் விளைபொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், நடப்பு கரீப் பருவத்தில் 14 வேளாண் விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதற்காக 2 லட்சத்து 7 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

விவசாயிகளுக்கு அவர்களது உற்பத்தி செலவைவிட கூடுதலாக 50 சதவீதம் கொள்முதல் விலை வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

விவசாயிகளுக்கு மாற்றியமைக்கப்பட வட்டி மானியத்துடன் கூடிய குறுகியகால கடன் வழங்குவதற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

இதன்படி, வேளாண் கடன் அட்டை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு 3 லட்சம் ரூபாய் 7 சதவீத மானிய வட்டியில் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கைகள் விவசாயிகளின் வருவாயை இரண்டு மடங்காக உயர்த்த வேண்டும் என்பதில் மத்திய அரசுக்கு உள்ள உறுதிப்பாட்டை எடுத்துரைப்பதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

மத்திய அமைச்சரவையின் இந்த முடிவுகள், கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவிடும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், விவசாயிகளின் நலனில் பிரதமருக்கு உள்ள அக்கறையை இது எடுத்துக்காட்டுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. சிவராஜ் சௌஹான் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

அண்ணா பல்கலைக் கழக மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட ஞானசேகரன் குற்றவாளி என சென்னை மகளிர் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்புக்கு தலைவர்கள் பலர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

இந்த வழக்கினை துரிதமாக நடத்தி, ஐந்தே மாதங்களில் நீதியை காவல்துறை பெற்றுத் தந்துள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதற்காக காவல்துறை அதிகாரிகளுக்கும், வழக்கறிஞர்களுக்கும், நீதிமன்றத்திற்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாக கூறியுள்ளார்.

இந்த வழக்கில் திமுகவைச் சேர்ந்த ஞானசேகரன், குற்றவாளி என வழங்கப்பட்டுள்ள தீர்ப்பினை வரவேற்பதாக மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்க இயலாது என்பதை இந்த தீர்ப்பு உறுதி செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் தொடர்பை பயன்படுத்தி, வரம்பற்ற குற்றங்களை நிகழ்த்தலாம் என்று நினைபோருக்கு இந்த தீர்ப்பு பாடமாக அமைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நெருக்கடியான காலத்திலும் மனவலிமையோடு, குற்றவாளிக்கு எதிரான சாட்சியங்களை அளித்து வழக்கு வெற்றிபெற போராடிய மாணவிக்கும், அவரது குடும்பத்தினருக்கும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமியும் இந்த தீர்ப்பினை வரவேற்றுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், திமுக அரசு இந்த வழக்கை நடத்திய விதத்தை பார்த்த பின்பு தான், சென்னை உயர்நீதிமன்றம் சிறப்பு புலனாய்வுக்குழு விசாரணைக்கு உத்தரவிட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தீர்ப்பினை வரவேற்றுள்ள பாமக, இந்த வழக்கில் குற்றவாளிக்கு துணை போனவர்களையும் கண்டறிந்து அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியதை உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

த.வெ.க தலைவர் திரு. விஜய்-ம் இந்த தீர்ப்பினை வரவேற்றுள்ளார்.

சமூகவலைதளத்தில் இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், திமுக அரசின் நிர்வாக தோல்வியின் காரணமாகத் தான், சென்னை உயர்நீதிமன்றம் தாமாக முன்வந்து இவ்வழக்கை துரிதப்படுத்தியதால், ஐந்து மாதங்களில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இதற்காக சென்னை உயர்நீதிமன்றத்திற்கு த.வெ.க. சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. விஜய் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>>

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்ததாழ்வுப் பகுதி வலுவடைந்து வருவதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திருமதி. அமுதா கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - அமுதா 63 செகண்ட்ஸ்)

<<<<<<<>>>>>>>

கிருஷ்ணகிரி சட்டப்பேரவை தொகுதி அஇஅதிமுக வேட்பாளர் திரு. அசோக்குமார் வெற்றி பெற்றதை எதிர்த்து, திமுக வேட்பாளர் திரு. செங்குட்டுவன் தாக்கல் செய்த மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

இந்த வழக்கை விசாரனை செய்த நீதிபதி திருமதி. ஆஷா இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தார்.

முன்னதாக, தபால் வாக்குகளை சரிபார்த்து, மறுவாக்கு எண்ணிக்கை நடத்தப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் வழக்கு தள்ளுபடி செய்யப்படுவதாக அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

வேலூர் அருகே தண்ணீர் தொட்டி கட்டுவதற்காக தோண்டப்பட்ட பள்ளத்தில் தவறிவிழுந்து இரண்டு குழந்தைகள் உயிரிழந்தனர்.

காட்பாடியை அடுத்த வேலம்பட்டு பகுதியைச் சேர்ந்த மணிகண்டன், அவருக்குச் சொந்தமான விவசாய நிலத்தில் தண்ணீர் தொட்டிக்காக தோண்டப்பட்ட பள்ளத்தில் தேங்கியிருந்த மழைநீரில் விழுந்து, குழந்தைகள் உயிரிழந்தாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>>

மாவட்டச் செய்திகள்

அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு பயிர்க் கடன் மற்றும் நகைக்கடன்கள் எவ்வித தாமதமும் இன்றி வழங்கப்பட வேண்டும் என்று தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி அதிகாரிகளுக்கு ஆட்சியர் திரு. ரத்தினசாமி அறிவுறுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

திருச்சியில் ஆட்சியர் திரு. பிரதீப்குமார் தலைமையில் போக்குவரத்து ஆய்வாளர்கள் 700-க்கு மேற்பட்ட பள்ளி வாகனங்களை இன்று ஆய்வு மேற்கொண்டனர்.

<<<<<<<>>>>>>>

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடியில் உள்ள டேனிஷ்கோட்டை 7 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

<<<<<<<>>>>>>>

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற வருவாய் தீர்வாயத்தில் ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் பங்கேற்று, பட்டா மாற்றத்திற்கான ஆணைகளை வழங்கினார்.

<<<<<<<>>>>>>>

திருப்பத்தூர் மாவட்டத்தில் காவல்துறை சார்பில் பொதுமக்கள் குறைதீர் கூட்டம், காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி. ஸ்ரேயா குப்தா தலைமையில் இன்று நடைபெற்றது.

<<<<<<<>>>>>>>

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் உள்ள அரசு பள்ளிகளில் ஆட்சியர் திரு. பிரதாப் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

<<<<<<<>>>>>>>

மதுரை ரயில் நிலையத்தில் தனியார் நிறுவன ஊழியர்கள் இன்று தூய்மைப் பணிகளை மேற்கொண்டனர்.

<<<<<<<>>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், 4 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

தென்கொரியாவின் **Gumi**-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் கலப்புக் குழு 400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

மகளிர் ஆயிரத்து 500 மீட்டர் ஓட்டப் பிரிவில் பூஜாவும், 400 மீட்டர் ஓட்டப் பிரிவில் **Rupal Chaudhary**–ம், ஆடவர் **Decathlon** –பிரிவில் **Tejaswin Shankar**–ம், ஆடவர் **Triple Jump** பிரிவில் **Praveen Chithravel**-ம் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் ஆயிரத்து 500 மீட்டர் ஓட்டப் பிரிவில் **Yoonus Shah** வெண்கலப்பதக்கம் வென்றார்.

<<<<<<<>>>>>>>

நான்கு நாடுகளுக்கு இடையேயான மகளிர் ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா - அர்ஜென்டினாவை வென்றது.

ரஷ்யாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இன்றைய ஆட்டத்தில் இரு அணிகளும் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் தலா ஒரு கோல் அடித்து சமநிலையில் இருந்தன.

இதனையடுத்து சூட்அவுட் அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் இந்தியா 2-0 என்ற கோல்கணக்கில் அர்ஜென்டினாவை வென்றது.

<<<<<<<>>>>>>>